**செ. கு. எண்: 131**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 1.6.2013

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், அச்சரப்பாக்கம் அருகே 25.5.2013 அன்று திருவண்ணாமலையிலிருந்து சென்னை வந்து கொண்டிருந்த அரசுப் பேருந்தும், கள்ளக்குறிச்சியிலிருந்து சென்னை வந்து கொண்டிருந்த அரசுப் பேருந்தும் மோதிக் கொண்டதில், உளுந்தூர்பேட்டை, வேப்பூர் பகுதியைச் சேர்ந்த பேருந்து நடத்துநர் திரு. ஞானவேல் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் அகால மரணமடைந்த பேருந்து நடத்துநர் ஞானவேல் அவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பத்தில் உயிரிழந்த பேருந்து நடத்துநர் ஞானவேல் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**